# முகவுரை

மார்ச் 2024-உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு, சட்டமன்றத்தில் வைக்கப்படும் பொருட்டு தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை, தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கம் மீதான செயலாக்கத் தணிக்கையின் முடிவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கையில், 2019-24 ஆண்டுகளின் கணக்குகளை சோதனை தணிக்கை செய்யும்போது கண்டறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.